திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மண்டலத் தலைவர்கள் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, வெ.உமாமகேஸ்வரி, தம்பி கோவிந்தராஜ், திருப்பூர் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் துரைசாமி, இயக்குநர் (மருத்துவ கல்வித்துறை, சென்னை) மரு.ஆர்.சாந்திமலர், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயனண், மாநகர துணை காவல் ஆணையர் அபிசேக் குப்தா, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஆர்.முருகேசன், சுகாதார குழுத்தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை பேசி தீர்க்கப்படும்!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேட்டி!

அரியலூர், மே 31 -

அரியலூரில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைவு படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. கூட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் சென்னையில் போக்குவரத்து தொழிற்சங்கங்கள் ஒற்றை கோரிக்கையை வலியுறுத்தி திடீர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதல்வர் ஜப்பானில் இருந்தாலும் உடனடியாக என்னை அழைத்து போராட்டத்தை நிறுத்த அறிவுறுத்தினார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தொடர்பு கொண்டு தகவல் சொன்ன காரணத்தினால் தொழிற்சங்க தலைவருடன் பேசினேன் அவர்கள் வைக்கக் கூடிய கோரிக்கைகள் குறித்து நேரடியாக பேசி முடிவெடுக்கலாம் என கூறினேன்.

அதன் அடிப்படையில் தொழிலாளர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு உடனடியாக பேருந்துகளை இயக்க தொழிற்சங்க நிர்வாகிகள் ஒப்புக்கொண்டு தற்போது அனைத்து பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்கு செல்வதற்கு பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

குறுகிய காலத்தில் பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

பள்ளிகள் மற்றும் கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்துகளை இயக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளிகளின் பயிலும் மாணவர்களுக்கு ஆயிரம் மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் திட்டத்தின் காரணமாக தற்போது அரசு பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்துள்ளது.

மேலும் இதனை கருத்தில் கொண்டு பள்ளி கல்வித்துறையுடன் போக்குவரத்து துறை அதிகாரிகள் கலந்து ஆலோசனை செய்து அவர்களுக்கு பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கூறினார்.

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி சார்பில்

முத்தமிழறிஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 100 அரங்கக் கூட்டங்கள்!

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

கிருஷ்ணகிரி, மே 31 -

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 26.05.2023 வெள்ளிக் கிழமை காலை 10.00 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், மாநிலத் தலைவர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையிலும், மாநில நிர்வாகிகள், வை.முத்துராஜன் எம்.எல்.ஏ., கே.தினகரன், ஆர்.சி.எம். விஷ்ணுபிரபு, ஏ.ஆர்.டி.உதயசூரியன், எம்.சிவராஜ், ஏ.கே.பூபதி, சி.செல்லதுரை, ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதீர்மானங்கள் வருமாறு:-

நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா"

ஒரு நூற்றாண்டு கால திராவிட இயக்க வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு பங்களிப்பாளர், நவீனத் தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி, தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும், தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட ஓய்வில்லாச் சூரியன், 94 ஆண்டுகால ஆயுட்காலத்தில், 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர், அரைநூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர், இந்தியத் திருநாட்டின் அரசியலின் அச்சாணியாகத் திகழ்ந்தவர், நமது தாய்மொழியாம் உயிரனைய தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று தந்தவர், கவிதைகள், சிறுகதைகள், சினிமாத்துறையில் வசனகர்த்தா, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சீர்மர பினர், முஸ்லீம், கிறிஸ்துவர்களுக்கெல்லாம் தனி இடஒதுக்கீடு தந்து அடி மட்டத்திலிருந்த மக்களை கை தூக்கி விட்டு, சமூக நீதி காத்த தலைவர், பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளித்து பொருளாதாரத்தில் கைதூக்கி விட்டவர், கை ரிக்ஷாவை ஒழித்தவர், வங்கிகள் தேசிய மயத்தை ஆதரித்தவர், பொதுத்துறையை உருவாக்கி லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து உச்ச நீதிமன்றத்தால் பாராட்டு பெற்றவர், இந்திய திருநாட்டின் பல குடியரசு தலைவர்களை உருவாக்கியவர், பல பிரதம அமைச்சர்கள் பதவி வகிக்க காரணமாக இருந்தவர்,

அமைப்புசாரா நல வாரியங்களை உருவாக்கி பல கோடி அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை அளித்த சீர்திருத்தவாதி, விவசாய பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரம் தந்து 7,000 கோடி கடனை தள்ளுபடி செய்தவர். இந்திய அரசியல் வானில் மிகப் பிரகாசமாக ஒளிர்ந்த நட்சத்திரம்.

இந்திய திருநாட்டின் ஒற்றுமைக்காக பாடுபட்டவர், சீனப்போர், கார்கில் போரில் இந்திய அளவில் முதன் முதலாக 6 கோடி ரூபாய் நிதி அளித்து தேச ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர், தான் போட்டியிட்ட அனைத்து சட்டமன்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர். முதல்வராக 19 ஆண்டு காலம் பணிபுரிந்து நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த நம் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வரும் ஜூன் 3 ல் தொடங்கி, ஓராண்டு காலம் தமிழகம் முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் புகழை எடுத்துக் கூறி பட்டிதொட்டி முதல் நகரங்கள் வரை கலைஞர் புகழ் பரப்பும் வகையில் நூற்றாண்டு விழா கொண்டாடுவதென, தமிழகத்தின் முதல்வர் தளபதியார் அவர்களின் கட்டளைக்கு ஏற்ப தலைமைக்கழகம், மாவட்டக்கழகம் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்பித்து, கலைஞர் புகழ் பாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

"தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் 100 அரங்க கூட்டங்கள்" மாவட்ட கழக செயலாளர்களுடன் கலந்து பேசி கழகத் தலைவர் தளபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட நிர்வாகிகள், அவரவர்கள் தத்தமது மாவட்டங்களில் நமது அணியின் சார்பில், "கலைஞர்100" முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சிகளாக ஏழை எளியோருக்கு உணவளித்தல், வேட்டி சேலை வழங்குதல், தொழுநோயாளிகள் முகாம்களில் உள்ளவர்களுக்கு உணவு மற்றும் வேட்டி சேலைகள் அளித்தல், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்குதல், "கலைஞர் 100" சிறப்பு நிகழ்ச்சிகளை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட நிகழச்சிகளை, நிர்வாகிகள் அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு "100 அரங்க கூட்டங்கள்" நடத்திட சம்மந்தப்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்து ஏற்பாடுகள் செய்து அணியின் மாநிலத்தலைவர், செயலாளர் பங்கேற்கும் விதமாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்து நம்முடைய அணியின் பங்கேற்பையும் நம் கழகத் தலைவர் மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் அறிய செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

"மாநகர பகுதி கழகம் நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்புக்கள் உருவாக்குதல்"

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணிக்கு மாவட்ட நிர்வாகிகள் பட்டியல் வெளியாகியுள்ள மாவட்டங்களில் உள்ள, மாநகர பகுதி கழகம், நகர கழகம், ஒன்றிய கழகம், பேரூர் கழக அமைப்புகளுக்கு அந்தந்த மாவட்ட கழக செயலாளர்களுடன் கலந்து பேசி நிர்வாகிகளை உடனடியாக நியமனம் செய்திடும் வகையில், மாநில நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும் உடனடியாக களத்தில் இறங்கி 30 நாட்களுக்குள் நிர்வாக பட்டியலை மாவட்ட அமைப்பாளர் மூலமாக, மாநில தலைமைக்கு அனுப்பி வைத்திட வேண்டும் எனவும்,

அவ்வாறு நியமனம் செய்யப்படும் நிர்வாகிகள் லாரி, தனியார் பஸ், ஆட்டோ, கார், டிராக்டர், பள்ளி, கல்லூரி பேருந்துகளில் ஓட்டுனர்களாக பணியாற்றுபவர்களை தேர்வு செய்தால் நல்லது, போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களையும் நியமனம் செய்யலாம்.

நமது அணியின் சார்பில் நடத்தப்பட்ட நேர்காணலில் கலந்துகொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நிர்வாகிகள் பட்டியலை 30 நாட்களுக்குள் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கழகத் தலைவர், முதல்வர் தளபதியார் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள மாவட்ட, மாநகர நிர்வாகிகள் மட்டும் கலந்து கொள்கிற ஆலோசனைக் கூட்டம், கழக துணைப் பொதுச் செயலாளர் நமது அணியின் பொறுப்பாளர் ஆ. ராசா M.P., (முன்னாள் மத்திய அமைச்சர்) அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் ஜூன் முதல் வாரத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

"மாவட்ட அளவில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டங்கள்"

அமைப்பு சாரா ஓட்டுனர் அணிக்கான மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை உடனடியாக கூட்டி ஆலோசனை செய்து, நமது அணியின் நோக்கம், செயல்பாடுகளை விளக்கி கூறியும், உறுப்பினர்களை சேர்ப்பது சம்மந்தமாக, ஆலோசித்து பணிகளை துவக்கிடும் வகையில் மாவட்ட வாரியாக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதென தீர்மானி க்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் ஒட்டம்பட்டில் நடைபெற்ற இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமைக் கழக பேச்சாளர் குடியாத்தம் பாரி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளனர்.

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையத்தில் நடைபெற்ற, புகளூர் காகித ஆலை LPF தொழிலாளர் சங்கத்தின் பொது மகாசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கரூர் மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி மற்றும் தொ,மு,ச, நிர்வாகிகள் உள்ளனர்.

மண்ணின் மைந்தர்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

பூண்டி.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர், மே 31 -

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவோம் எனவும் , வடசென்னை பொதுக்கூட்டம் மற்றும் கலைஞர் கோட்டம் திறப்புவிழா ஆகியவற்றில் பெருந்திரளாக பங்கேற்போம் எனவும் மாவட்டச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார் .

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது ,

"உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று பார்முழுவதும் இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மாவட்டமான திருவாரூரில் தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களோடு கலைஞர் நூற்றாண்டுவிழா ஜூன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்படவிருக்கிறது .

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய் , தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உலக அளவில் உயர்ந்து இருந்தபோதும், இரண்டு முறை தனது சொந்த மண்ணான திருவாரூரில் போட்டியிட்டு வெற்றிபெற்று இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் மேலும் பெருமை சேர்த்தவர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரர் ஆவார் .

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவரின் நூறாவது பிறந்தநாளை கலைஞர் நூற்றாண்டு விழாவாக அறிவித்து தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் தளபதி அவர்கள் , கலைஞர் அவர்களின் புகழ் கிரீடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லை பொருத்தி பெருமை சேர்த்திருக்கிறார்கள் .

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை திருவாரூர் மாவட்டம் முழுவதிலும் ஒன்றிய ,நகர, பேரூர் மற்றும் வார்டுகள், கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றியும் , பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவதோடு, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் , மாணவ மாணவிகளுக்கு கல்விகற்க உதவிகள் வழங்குதல் , விளையாட்டுப்போட்டிகள் , இலக்கிய போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை, இந்த வருடம் முழுவதும் நடத்தி கலைஞர் எனும் மாமனிதரின் புகழ் பாடுவோம்.

தலைமைக்கழகத்தின் அறிவிப்பின்படி சென்னையில் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையில் தேசிய தலைவர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டத்திலும், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் கோட்டம்" எனும் மாபெரும் நினைவுச்சின்ன தொடக்க விழாவில் பங்கேற்கும் கழக தலைவர் தளபதி அவர்களையும் , கழக அமைச்சர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் , தேசிய தலைவர்களை வரவேற்று சிறப்பிக்கவும், அன்றைய தினம் முழுவதும் திருவாரூரில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்க திருவாரூர் மாவட்டத்தின் அனைத்து பகுதி மக்களும் அரசியல் , இனம், மொழி பாகுபாடுகள் இன்றி பெருந்திரளாக பங்கேற்று உலகப்புகழ் பெற்று உயர்ந்து நிற்கும் உத்தம தலைவருக்கு பெருமை சேர்ப்போம்.

என அறிக்கை விடுத்தும், மாவட்ட மக்களுக்கு அழைப்பு விடுத்தும் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஓட்டல் தமிழ்நாடு உணவகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
மே 31 (2004)

திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.

பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.